**Previous Examination date – 10.03.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 371 of 2022**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : நாட்ராயன்** | **Father/Husband's Name : சண்முகவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**A1 to A6 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அ.கலையம்புத்தூரில் குடியிருந்து ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 09.05.2018ம் தேதி மாலை 4.00 மணியளவில் நாகம்மாள் வீட்டிற்கு அவரது கொழுந்தனார்கள் வந்து கெட்ட வார்த்தை பேசி அடித்தார்கள் என கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 09.05.2018ம் தேதி மாலை சுமார் 4.15 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஒன்று சேர்ந்து கெட்ட வார்த்தை பேசி முழு சொத்தை அமுக்க பார்க்குறீர்களா என கேட்டு அ.சா.1ஐ தலை முடியை பிடித்து கையால் அடித்து, அறிவாளால் தலையில் வெட்டினார் எனவும், எதிரி ஆறுமுகம் அறிவாளால் அ.சா.1ன் அம்மாவின் தலையில் வெட்டினார் எனவும், அ.சா.1–ன் அக்காவின் கணவரை அ.சா.1–ன் அக்காவின் மாமியார் கம்மாடச்சி கையால் அடித்தும், குச்சியால் அடித்தார் எனவும், பின்னர் அக்கம்பக்கத்தினர் வரவே ஆஜர் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், பின்னர் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தேன் எனவும் போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**3. இல்லை.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:22:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**